# ஆங்கிலத்தை K-10 கூடுதல் பாடமாகவோ அல்லது கிளைமொழியாகவோ கற்கும் மாணவர்களுக்கான எழுத்துமூல அறிக்கைகள்

## பெற்றோர் மற்றும் பராமரிப்பாளர்களுக்கான தகவல்

அன்புள்ள பெற்றோர்களே மற்றும் பராமரிப்பாளர்களே

உங்கள் பிள்ளையின் பள்ளியிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் இரண்டு எழுத்துப்பூர்வ அறிக்கைகளைப் பெறுவீர்கள். இந்த அறிக்கைகள் உங்கள் பிள்ளை எவ்வாறு முன்னேறுகிறது மற்றும் உங்கள் பள்ளி உங்கள் பிள்ளையின் கற்றலுக்கு எவ்வாறு ஆதரவுதவியளிக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள உதவும். ஒவ்வொரு அறிக்கையும், அனைத்துப் பாடங்களிலும் உங்கள் பிள்ளையின் முன்னேற்றத்தை காண்பிக்கும்.

### கூடுதல் மொழியாகவோ அல்லது கிளைமொழியாகவோ ஆங்கிலத்தைக் கற்கும் மாணவர்களுக்கான அறிக்கைகள் (English as an additional language or dialect (EAL/D))

உங்கள் பிள்ளை ஆங்கிலத்தை கூடுதல் மொழியாகவோ அல்லது கிளைமொழியாகவோ (EAL/D) கற்றுக்கொண்டிருந்தால், இந்த அறிக்கை, அவர்களின் ஆங்கில மொழி விருத்திக்கு எவ்வாறு ஆதரவுதவியளிக்கப்பட்டுகின்றது மற்றும் அவர்கள் ஆங்கிலக் கற்றலில் எவ்வாறு முன்னேற்றம் கண்டுள்ளனர் என்பதை விளக்கும். முதலாம் வகுப்பு மற்றும் அதற்கு மேற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கான அறிக்கையில், அவர்கள் தற்போதைய ஆங்கில மொழி திறன் நிலையும் குறிப்பிடப்படும். அந்த நிலைகள்: ஆரம்ப நிலை, வெளிப்படும் நிலை , வளர்ச்சி நிலை , மற்றும் திடமான நிலை. இந்த நிலைகள் குறித்த விளக்கங்கள் மறுபக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

### புதிதாக வந்த (EAL/D) மாணவர்களுக்கான அறிக்கைகள்

உங்கள் பிள்ளை EAL/D திட்டத்தில் இருப்பதோடு, ஆஸ்திரேலியப் பாடசாலையொன்றில் நான்கு அல்லது அதற்குக் குறைவான தவணைகள் மட்டுமே படித்திருந்தால், உங்கள் பிள்ளையின் எழுத்து அறிக்கையில் தரம் குறிப்பிடுவதற்குப் பதிலாக அவர்கள் கற்றுக் கொண்டிருக்கும் பாடங்களில் அடைந்துள்ள முன்னேற்றத்தைப் பற்றிய குறிப்புகள் இடம்பெறலாம்.

### உயர்தர ஆங்கில மையங்கள் அல்லது ஆங்கில உயர்நிலைப் பள்ளியில் புதிதாக வந்த EAL/D மாணவர்களுக்கான அறிக்கைகள்.

உங்கள் பிள்ளை ‘துரித ஆங்கிலக் மையமொன்றில்’ அல்லது ‘துரித ஆங்கில உயர்நிலைப்பள்ளியில்’ சேர்க்கப்பட்டிருந்தால், அவர்களின் ஆங்கிலக் கற்றலின் முன்னேற்றத்தைப் பற்றிய ஒரு எழுத்து மூலமானஅறிக்கையைப் பெறுவீர்கள். மேலும், இந்த அறிக்கை, உயர்நிலைப் பள்ளிக்கான தயார்படுத்தல் படிப்புகளில் கற்றுக்கொண்ட அனைத்து பாடங்களினதும் முன்னேற்றங்களையும் எடுத்துக்காட்டும்.

| ஆங்கில மொழிப் புலமை நிலைகள் | |
|---|---|
| **ஆரம்பநிலை** | ஆரம்ப நிலையில் உள்ள மாணவர்கள் ஆங்கிலம் கற்க ஆரம்பிப்பவர்கள். அவர்கள் ஆங்கிலம் தவிர வேறு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளைப் பேசக்கூடியவர்கள், மேலும் அவர்களின் வயதுக்கு ஏற்ற அளவிலான எழுத்தறிவு அவர்களின் தாய்மொழியில் இருக்கலாம். இந்த மாணவர்கள் பாடத்திட்டத்தின் எளிய மொழிப் பாட வேலைகளில் ஈடுபடத் தொடங்குகிறார்கள். |
| **வெளிப்படும் நிலை** | வெளிப்படும் நிலையில் உள்ள மாணவர்கள் வளர்ந்து வரும் ஆங்கில அறிவைக் கொண்டுள்ளனர். இந்த மாணவர்கள் அடிப்படை ஆங்கிலம் உட்பட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளைப் பேசக்கூடியதோடு, மேலும் ஆங்கில எழுத்தறிவு வளர்ச்சியையும் அடைந்திருப்பார்கள். பொருத்தமான மொழி கற்பித்தல் மற்றும் வகுப்பறை செயல்பாடுகளை முடிக்க கூடுதல் நேரம் வழங்கப்படும்போது இந்த மாணவர்கள் வகுப்பறை நடவடிக்கைகளில் பங்கேற்கவும் கற்றலில் ஈடுபடவும் முடியும். |
| **வளர்ச்சிநிலை** | வளர்ச்சி நிலையில் உள்ள மாணவர்கள் செயல்பாட்டு ஆங்கிலம் உட்பட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளைப் பேச முடிவதுடன் ஆங்கில எழுத்தறிவில் வளர்ந்து வரும் அறிவுத்திறனைக் கொண்டிருப்பர். இந்த மாணவர்கள் வகுப்பறை மற்றும் பள்ளி நடவடிக்கைகளில் சுறுசுறுப்பாகப் பங்கேற்பதுடன் , மேலும் கற்றல் பணிகளில் அதிக வெற்றியுடன் ஈடுபட முடியும். அவர்கள் தமது ஆங்கில இலக்கண வளர்ச்சியைப்  பேணிவருவதோடு, தங்கள் சொல்லாற்றலையும் வளர்த்துக் கொள்ளும் அதேவேளையில், அவர்களின் தாய்மொழி தொடர்ந்தும் பெறுமதிமிக்க உறுதுணையாக இருந்து வருகிறது. |
| **திடமான நிலை** | திடமான நிலையில் உள்ள மாணவர்கள் ஆங்கிலம் உட்பட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளைப் பேச கூடியவர்களாகவும், மேலும் ஆங்கில எழுத்தறிவில் நல்ல தேர்ச்சியையும் கொண்டவர்களாக இருப்பர். இந்த மாணவர்கள் வகுப்பறை மற்றும் பள்ளி நடவடிக்கைகளில் சுயாதீனமான பங்கேற்பர், மேலும் பொதுகற்றலில் ஆங்கிலத்தைப் பயன்படுத்தும் அதிகரித்த திறனைக் கொண்டு வெற்றியீட்டுவர். அவர்கள் புரிதலுடன் பல்வேறு குறிப்பிட்ட நோக்கங்களுக்காக பேச்சு மற்றும் எழுத்து வடிவங்களை உருவாக்குவர்.  ஆனால் பாடத் துறைகளின் கல்வி மொழிவளம் அதிகரித்து வருவதால், EAL/D கற்பவர்களுக்கு உறுதுணையாக இருக்கக்கூடிய, ஒருமுகப்படுத்தப்பட்ட மொழிக் கற்பித்தல் மற்றும் உத்திகள் தேவைப்படுகின்றன. |

## தொலைபேசி உரைப்பெயர்ப்பாளர் சேவை

மேலும் தகவல் தேவைப்பட்டால் பள்ளியைத் தொடர்பு கொள்ளவும். பள்ளியைத் தொடர்பு கொள்ள உங்களுக்கு ஒரு உரைப்பெயர்ப்பாளர் தேவைப்பட்டால், தயவுசெய்து 131 450 என்ற எண்ணில் தொலைபேசி உரைப்பெயர்ப்பாளர் சேவையை அழைத்து உங்கள் மொழியில் ஒரு உரைப்பெயர்ப்பாளர் தேவை என்று கேளுங்கள். உரைப்பெயர்ப்பாளர் பள்ளியை அழைத்து உரையாடலுக்கு உதவ இணைப்பில் இருப்பார். இந்த சேவைக்கு உங்களிடம் கட்டணம் அறவிடப்படமாட்டாது.